# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 1037/SCIC/2024**

திரு.பாலாஜி - மேல்முறையீட்டாளர்
எண்.20/08, எண்.S2, 1st Floor
Hilarity Flats, Central Excise Colony
V.G.P.சாலை, சைதாப்பேட்டை
சென்னை - 600 015.
Phone:7358067607

*/எதிர்/*

1.The Public Information Officer/ - பொது அதிகார அமைப்பு
Section Officer
Home (Citizenship) Department
Secretariat, Chennai-600 009.
2. The Public Information Officer/
Section Officer
Law Department
Secretariat, Chennai-600 009.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **12.10.2023** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 08.11.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.12.2023 |
| 4. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.01.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.01.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12/10/2023 நாளிட்ட மனுவை The Public Information Officer/Section Officer, Home (Citizenship) Department, Secretariat,

Chenni-9 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Please share with me a copy of the Notification issued by your good office (Home Department) THE CRIMINAL PROCEDURE (IDENTIFICATION) ACT, 2022 on which the said Act shall come into force.” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.பாலாஜி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி/செல்வி.கா.பிரேமா ராணி, அரசு சார்புச் செயலாளர், சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை மற்றும் திருமதி.வி.சாந்தி, பிரிவு அலுவலர், உள்துறை, தலைமைச் செயலகம், சென்னை ஆகியோர் ஆஜரானார்கள். பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், உள்துறை அவர்கள் மனுதாரருக்கு 08/11/2023, தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகவும், அதாவது, மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து சட்டத்துறைக்கு மாற்றம் செய்துள்ளதை தெரிவித்துள்ளதாகவும் கூறினார். பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், சட்டத்துறை அவர்கள் தெரிவிக்கையில், 27/11/2023 தேதியிட்டு மனுதாரருக்கு கடிதம் அனுப்பி, அதில் மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனு, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், உள் துறைக்கு மாற்றம் செய்து அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டார். பொதுத் தகவல் அலுவலர், உள்துறை அவர்கள் தெரிவிக்கையில், 30/01/2024 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலர் மனுதாரருக்கு, அன்னாரின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனு, சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டு காவல்துறை இயக்குநர், சிறைத்துறைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர், சிறைத்துறை அவர்கள் மனுதாரருக்கு 27/02/2024 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர், உள்துறை அவர்கள் தெரிவிக்கையில், ஏற்கனவே பொதுத் தகவல் அலுவலர், சிறைத் துறை அலுவலகம், சென்னை அவர்கள் 10/01/2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகக் கூறியதோடு, அது தொடர்பான நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1037/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.The Public Information Officer/
Section Officer
Home (Citizenship) Department
Secretariat, Chennai-600 009.

2. The Public Information Officer/
Section Officer
Law Department
Secretariat, Chennai-600 009.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.பாலாஜி
எண்.20/08, எண்.S2, 1st Floor
Hilarity Flats, Central Excise Colony
V.G.P.சாலை, சைதாப்பேட்டை
சென்னை - 600 015.
Phone:7358067607

RG/Sr.PC